# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2196/37 - 2020 ඔක්තෝබර් මස 07 වැනි බදාදා - 2020.10.07

*2196/37 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 07 ஆந் திகதி புதன்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்**

*92 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், நீர் வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணாயக்கார ஆகிய நான், குறித்த சபைக்கு களுகங்கை நீர் வழங்கல் செயற்திட்டத்தை மேம்படுத்தும் திட்டத்தின் கீழ் பண்டாரகமை நிலக்கீழ் நீர்த்தேக்கத்தை நிர்மாணிப்பதற்காக மேலதிகக் காணித்துண்டு ஒன்றினைச் சுவீகரித்துக்கொள்வதற்கான தேவை ஏற்பட்டுள்ளமையினால், இங்கு கீழ்க் காணப்படும் அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்டுள்ள காணிப்பகுதியின் அசையாச் சொத்துரிமையைச் சுவீகரித்துக்கொள்வதை இக்கட்டளையினூடாக அனுமதியளிக்கின்றேன்.*

**வாசுதேவ நாணாயக்கார,**
*நீர் வழங்கல் அமைச்சர்.*

*நீர் வழங்கல் அமைச்சு,*
*இலக்கம் 35, 'லக்திய மெதுர',*
*புதிய பாராளுமன்ற வீதி,*
*பெலவத்தை,*
*பத்தரமுல்லை,*
*2020, ஒற்றோபர் 02.*
*தொடர்பு இல. 5-2/KT/10*

**அட்டவணை**

*களுத்துறை மாவட்டத்தின், பண்டாரகமை பிரதேச செயலகப் பிரிவில், இலக்கம் 633/B, பண்டாரகமை மேற்கு கிராம அலுவலர் பிரிவில் மஸ்வில கிராமத்தில் அமைந்துள்ள தவடகஹகனத்த அல்லது தவல்கஹகனத்த என்றழைக்கப்படும் நில அளவையாளர்*

*நாயகத்தினால் தயாரிக்கப்பட்டுள்ள இலக்கம் Ka/BAN/ 19/ 683 இல் மேம்படுத்தப்பட்ட வரைபடப் படியெடுப்பில் துண்டு A என சுட்டிக்காட்டப்பட்டுள்ள 0.1898 (75 பேர்ச்சஸ்) விஸ்தீரணமுள்ள பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ள காணிப்பகுதி.*

*வடக்கு : உரிமையாளரைக் கண்டறியமுடியாதுள்ள போல்கொட வெல்யாய ;*

*கிழக்கு : கே. அமரதாச மற்றும் பீ. டீ. சீ. பெரேரா உரிமம் கோரும் தவடகஹகனத்த அல்லது தவல்கஹகனத்த மற்றும் துண்டு இலக்கம் பி ;*

*தெற்கு : துண்டு இலக்கம் பி மற்றும் ஏ. கே. ரத்நாயக உரிமம் கோரும் தவடகஹகனத்த ;*

*மேற்கு : ஏ. கே. ரத்நாயக மற்றும் பண்டாரகமை பிரதேச சபை உரிமம் கோரும் தவடகஹகனத்த மற்றும் உரிமம் கோருபவரை கண்டறிய முடியாதுள்ள போல்கொட வெல்யாய.*

*காணிக்கு உரிமை கோருபவரின் பெயரும் முகவரியும் : திருமதி ஹேனாதீர ஆரச்சிகே ஷன்திராவதி பெரேரா*
*மற்றும் பலர்,*
*நம்புக்கன, பண்டாரகமை.*

*10-848*

---

### *1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்*

*92 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், நீர் வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணாயக்கார ஆகிய நான், குறித்த சபைக்கு உத்தேச மொரவக நீர் வழங்கல் செயற்திட்டத்தின் கீழ், நிர்மாணிக்கப்படும் நிலக்கீழ் நீர்த்தடாகம் மற்றும் நீர் இறைக்கும் இயந்திரசாலைக்கு உட்செல்லும் வழியை நிர்மாணிப்பதற்கான காணிப்பகுதியொன்றினைச் சுவீகரித்துக்கொள்வதற்கான தேவை ஏற்பட்டுள்ளமையினால், இங்கு கீழ்க் காணப்படும் அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்டுள்ள காணிப்பகுதியின் அசையாச் சொத்துரிமையை சுவீகரித்துக்கொள்வதை இக்கட்டளையினூடாக அனுமதிக்கின்றேன்.*

**வாசுதேவ நாணாயக்கார,**
*நீர் வழங்கல் அமைச்சர்.*

*நீர் வழங்கல் அமைச்சு,*
*இலக்கம் 35, 'லக்திய மெதுர',*
*புதிய பாராளுமன்ற வீதி,*
*பெலவத்தை,*
*பத்தரமுல்லை,*
*2020, ஒற்றோபர் 02.*
*தொடர்பு இல. 5-2/MH/11*

**அட்டவணை**

*மாத்தறை மாவட்டத்தின், கொடபொல பிரதேச செயலகப் பிரிவில், இலக்கம் 242/ B, இலுக்பிடிய கிராம அலுவலர் பிரிவில் இலுக்பிடிய கிராமத்தில் அமைந்துள்ள கம்சபா வீதி என்றழைக்கப்படும் உட்செல்லும் பாதையிலிருந்து 04 பேர்ச்சஸ் விஸ்தீரணத்தையுடைய பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ள காணிப்பகுதி.*

*வடக்கு : கம்சபா வீதி மற்றும் வீதிக்காப்பு ;*

*கிழக்கு : திரு. கே. கிரிகோரிஸ் அவர்கள் உரிமை கோருகின்ற காணி ;*

*தெற்கு : திரு. சோமபால கலுஆரச்சி உரிமை கோருகின்ற காணி ;*

*மேற்கு : திருமதி ஜே. எல். பிரேமாவதி உரிமை கோருகின்ற காணி மற்றும் இலுக்குபுர பாடசாலை வீதி.*

*காணிக்கு உரிமை கோருகின்றவரின் பெயரும் முகவரியும் : 01. திரு. சோமபால கலுஆரச்சி,*
*கல்தொல,*
*கொடபொல.*

*10-849*

## *1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்*

*92 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், நீர் வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணாயக்கார ஆகிய நான், குறித்த சபைக்கு பாரிய மாத்தளை நீர் வழங்கல் திட்டத்தின், மாத்தளை நீர் சுத்திகரிக்கும் நிலையத்தை நிர்மாணிப்பதற்குத் தேவையான மேலதிகக் காணிப்பகுதிகளைப் பெற்றுக்கொள்ளத் தேவை ஏற்பட்டுள்ளமையினால், இங்கு கீழ்க் காணப்படும் அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்டுள்ள காணிப்பகுதிகளின் அசையாச் சொத்துரிமையைச் சுவீகரித்துக்கொள்வதை இக்கட்டளையினூடாக அனுமதிக்கின்றேன்.*

**வாசுதேவ நாணாயக்கார,**
*நீர் வழங்கல் அமைச்சர்.*

*நீர் வழங்கல் அமைச்சு,*
*இலக்கம் 35, 'லக்திய மெதுர',*
*புதிய பாராளுமன்ற வீதி,*
*பெலவத்தை,*
*பத்தரமுல்லை,*
*2020, ஒற்றோபர் 02.*
*தொடர்பு இல. 5-2/KY/12*

**அட்டவணை**

*மத்திய மாகாணத்தின், மாத்தளை மாவட்டத்தில், மாத்தளை பிரதேச செயலாளர் பிரிவில், இலக்கம் ஈ352 H, ஒய பஹல கிராம அலுவலர் பிரிவில் ஒய பஹல (பாலம் வீதி பகுதி) ஹியாரே கிராமத்தில் அமைந்த, காணித்துண்டிலக்கம் 01 மற்றும் 02 எனக் குறிப்பிடப்பட்டுள்ள முழு அளவில் சுமார் 83.25 பேர்ச்சஸ் அளவிலான "ஜம்புகஹ வத்த" எனும் பெயருடைய காணியில் கீழ்க்காணப்படும் எல்லைகளில் அமைந்த காணித்துண்டுகள் இரண்டு.*

**1. காணித்துண்டு இலக்கம் : 01**
*காணியின் பெயர் : ஜம்புகஹ வத்த*
*காணியின் விஸ்தீரணம் : 3.25 பேர்ச்சஸ்*
*காணியின் எல்லைகள் :*

*வடக்கு : எம். எஸ். பாத்திமா சாதியா உரிமை கோரும் காணி ;*
*கிழக்கு : எம். ஐ. எச். இனுன் உரிமை கோரும் தெகிதவத்த காணி ;*
*தெற்கு : தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கு உரிய காணி மற்றும் எச். ஏ. எம். ஹரிசா உரிமை கோரும் காணி ;*
*மேற்கு : தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கு உரிய காணி மற்றும் தோட்ட வீதி.*

*காணிக்கு உரிமை கோருபவர்களின் பெயரும் முகவரியும் :*

**காணித்துண்டு இலக்கம் : 01**

*(1) திருமதி எம். எஸ். பாத்திமா,*
*25/80/09, ஒய பஹல,*
*மாத்தளை.*

**காணித்துண்டு இலக்கம் : 02**

*(1) திருமதி எச். ஏ. எம். ஹரிசா,*
*இல. 167, கொடபல வீதி,*
*மாத்தளை.*

*10-850*

## *1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்*

*92 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், நீர் வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணாயக்கார ஆகிய நான், குறித்த சபைக்கு இமதுவ நீர் வழங்கல் செயற்திட்டத்தின் கீழ், நீர்த்தாங்கியை நிர்மாணிப்பதற்கான காணிப்பகுதிகளைச் சுவீகரித்துக்கொள்வதற்கான தேவை ஏற்பட்டுள்ளமையினால், இங்கு கீழ்க் காணப்படும் அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்டுள்ள காணிப்பகுதியின் அசையாச் சொத்துரிமையை சுவீகரித்துக்கொள்வதை இக்கட்டளையினூடாக அனுமதிக்கின்றேன்.*

**வாசுதேவ நாணாயக்கார,**
*நீர் வழங்கல் அமைச்சர்.*

*நீர் வழங்கல் அமைச்சு,*
*இலக்கம் 35, 'லக்திய மெதுர',*
*புதிய பாராளுமன்ற வீதி,*
*பெலவத்தை,*
*பத்தரமுல்லை,*
*2020, ஒற்றோபர் 02.*
*தொடர்பு இல. 5-2/GL/13*

***அட்டவணை***

*காலி மாவட்டத்தின், இமதுவ பிரதேச செயலகப் பிரிவில், இலக்கம் 175சீ, கொடஉட மண்டிய கிராம அலுவலர் பிரிவில் ஹவுபே கிராமத்தில் அமைந்துள்ள வேகன்தெனிய கொடவத்த என்றழைக்கப்படும் காணியிலிருந்து 15 பேர்ச்சஸ் விஸ்தீரணத்தையுடைய பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ள காணிப்பகுதி.*

*வடக்கு : மாரகஹவத்த வீதி ;*
*கிழக்கு : இக்காணியின் எஞ்சியுள்ள பகுதி ;*
*தெற்கு : இக்காணியின் எஞ்சியுள்ள பகுதி ;*
*மேற்கு : இக்காணியின் எஞ்சியுள்ள பகுதி.*

*காணிக்கு உரிமை கோருகின்றவரின் பெயரும் முகவரியும் : 01. திரு. எஸ். கே. பரணவிதான,*
*இலக்கம் 229, "லீலானி",*
*ஹவுபே.*

*10-851*